பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 30 புதன்கிழமை (15.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 259

# அரசியல் தீர்வு யோசனை உருவாக்கும் அரசின் 1½ வருட முயற்சி பிசுபிசுத்தது!

## தெரிவுக் குழுக் கூட்டத்தில் முரண்பாடு; திகதி குறிப்பிடாமல் அது கலைந்தது!!

கொழும்பு, ஓகஸ்ட் 15

**இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதற்காக உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் சுமார் ஒன்றரை வருட கால முயற்சி வீண் போய்விட்டது; பிசுபிசுத்துப் போயிற்று.**

**இதுநாள் வரை மொத்தம் 39 தடவைகள் கூடி ஆராய்ந்து வகுக்கப்பட்ட யோசனை வடிவம் குறித்து ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டு, முரண்பாடு எழுந்ததால் தெரிவுக் குழுவின் அமர்வுக்கு திகதி எதுவும் குறிப்பிடப்படாமலே காலவரை எதுவுமின்றி அது நேற்றுக் கலைந்தது.**

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை வகுக்கும் பொருட்டு ஜனாதிபதி அனைத்துக் கட்சிக்குழு ஒன்றை ஆரம்பத்தில் நியமித்திருந்தார். பிரஸ்தாப அனைத்துக் கட்சிகள் குழு, விரிவான தீர்வுயோசனை ஒன்றை உருவாக்குவதற்காக அனைத்துக் கட்சிகள் பிரதிநிதிகள் குழு (All Party Representative Committe) ஒன்றை நியமித்தது.

மேற்படி அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு, கடந்த சுமார் ஒன்றரை வருடங்களாகக் கூடி, கட்சிகள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச திட்டங்களைப் பரிசீலித்து, நுணுக்கமாக ஆராய்ந்து யோசனையைச் சமர்ப்பிப்பதற்காக மொத்தம் 39 தடவைகள் கலந்து பேசியது.

குழுவின் யோசனையின் இறுதி வடிவத்தை தெரிவுக் குழுவின் தலைவர் சமர்ப்பிப்பதற்கான நாள் - இன்று - ஓகஸ்ட் 15 ஆம்திகதி - என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண இம்மாத முற்பகுதியில் அறிவித்திருந்தது தெரிந்ததே.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஓக.15

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலானபயணிகள் கப்பல் சேவை இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

அரசஅதிபர் கே.கணேஸ் நேற்றிரவு இதனை அறிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை கப்பலில் பயணம் செய்வதற்காக செயலகத்தில் பயண அனுமதிப்பத்திரம் (ரோக்கின்) பெற்றவர்களை இன்றுகாலை 7மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ்.ரயில் நிலையத்துக்குச் செல்லுமாறு அரச அதிபர்மேலும் கேட்டுள்ளார். (1)

## கொழும்பில் நேற்று 5 தமிழர்கள் கைது

கொழும்பு,ஓக. 15

கொழும்பு நாடாளுமன்றத்துக்கு அருகில் ஐந்து தமிழ் இளைஞர்கள் நேற்றுக் காலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்துக்கு அருகில் உள்ள விளையாட்டு மைதானப் பகுதியில் சந்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மேன் முறையீட்டு மேல் நீதிமன்றம் எதிர்வரும் திங்களன்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஓக.15

குடியியல் வழக்குகளை விசாரணை செய்வதற்கான மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் எதிர்வரும் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட உள்ளது.

நீதிமன்றின் ஆரம்ப அமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வைபவ ரீதியாக பழைய பூங்கா வீதியிலிலுள்ள யாழ். மேல் நீதிமன்றத்தில் இடம்பெற உள்ளது.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். தியாகேந்திரன், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.விஸ்வநாதன் ஆகியோர் சம்பிரதாய பூர்வமாக அமர்வினை ஆரம்பித்து வைப்பர்.

குடியியல் வழக்குகளை மாவட்ட மட்டத்தில் விசாரித்து அவற்றுக்கான தீர்ப்புக்களை வழங்குவதற்காக பிரதம நீதியரசர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சங்கானைச் சந்தையில் நேற்று வரிசேகரிப்பாளர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், ஓக.15

சங்கானை மரக்கறிச் சந்தை நேற்றுக் காலை கூடிய சிறிது நேரத்தில் - சுமார் 6.10 மணியளவில் - அங்கு பணியாற்றிய வரி சேகரிப்பாளர், ஆயுததாரி ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் மரக்கறி வாங்குவதற்காக கூடிநின்ற வேளையில், வீதியில் வந்துநின்ற இரண்டு மோட்டார் சைக்கிள்களில் இருந்து இறங்கிய ஒருவர், உள்ளே சென்று வரி சேகரிப்பாளரைச் சுட்டுக்கொன்றுவிட்டுச் சென்றார் என்று சொல்லப்படுகின்றது.

சுன்னாகம், கந்தரோடையைச் சேர்ந்த தியாகராஜா விமலேந்திரன் (சிவா - வயது 37) என்னும் 3 பிள்ளைகளின் தந்தையே சுட் டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கொலையுண்டோரின் சடலங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக.15

குடாநாட்டில் வெவ்வேறு சம்பவங்களின்போது நேற்றுமுன்தினம் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட 5 பேரின் சடலங்களும் நேற்று மாலை அவர்களின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

ஐவரின் சடலங்களும் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கைய

(08 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிரான சர்வதேச சதியின் அங்கமே ஐ.நா. உயரதிகாரியின் கருத்து

## இது போன்ற சூழ்ச்சிகளை அரசு முறியடிக்கும் என்கிறார் ரம்புக்வெல

கொழும்பு, ஓகஸ்ட் 15

''புலிகள் தங்களின் இலக்கை அடைவதற்கு வசதியாக சில சர்வதேச சக்திகள் சதி முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. இலங்கை பற்றிய பொய்யான கருத்துகளை சர்வதேச மட்டத்தில் பரப்பி புலிகளின் நோக்கை நிலைநிறுத்தும் நோக்கில் இத்தீய சக்திகள் செயற்படத் தொடங்கியுள்ளன.

''ஐ.நாவின் மனிதாபிமான பணிகளுக்கான உதவிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் போன்றோர் அத்தகைய தீய முயற்சிகளுக்கே துணை போகின்றனர். ஆனால், இந்த வகையான சதித்திட்டங்களை இலங்கை வெற்றிகரமாக முறியடிக்கும்'' - என அரசு அறிவித்துள்ளது.

இறைமையுள்ள இலங்கைக்கு இவ்வாறு சர்வதேச தீய சக்திகளால் விடுக்கப்படும் சவால்கள் அனைத்தையும் எதிர்கொண்டு முறியடிக்க முடியும். எந்த வகையான சூழ்ச்சிகளையும் நாம் தகர்த்துவிடுவோம்.

- இவ்வாறு தேசிய பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகெலிய ரம்புக்வெல நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

சில சர்வதேச சக்திகள் இலங்கைக்கு எதிராக சதி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் ஜே.வி.பி.நேற்று ஆர்ப்பாட்டம்



அரசுக்கு எதிராக ஜே.வி.பியினர் நேற்று கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

பொரளை கம்பல் மைதானத்தில் நேற்றுப்பிற்பகல் 2.30 மணிக்குத் தொடங்கிய இந்த ஆர்ப்பாட்டப் பேரணி மருதானை ஊடாக லிப்டன் சுற்றுவட்டத்தை மாலை 4.30 மணியளவில் வந்தடைந்தது.

ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் மஹிந்த அரசுக்கு எதிரான பதாகைகளைத் தாங்கியிருந்தனர். விலைவாசி அதிகரிப்புக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தலைமையில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. பேரணியின் தொடக்கத்தில் உரையாற்றிய சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தவை வருமாறு:-

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய விசா பெறுவதில் இன்றுமுதல் புதிய மாற்றம்

கொழும்பு, ஓக.15

இந்தியா செல்வதற்கான 'விசா' வழங்கும் நடைமுறைகளில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன என இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. விசாவிற்கென அதிகளவில் மக்கள் விண்ணப்பிக்கும்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை நிவர்த்தி செய்யும் பொருட்டே இந்தப் புதிய நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமை முதல் புதிய ஒழுங்கின்படி இந்தியாவிற்கான விசா வழங்கும் நடைமுறை அமுல்படுத்தப்படும் என்று தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் புதிய நடைமுறையின்படி விசா

(08 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே 05 ஆம் பக்கத்தில்**

*ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 1*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உயிர் அச்சுறுத்தல்; இளைஞர் சரண்

யாழ்ப்பாணம், ஓக.15

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று சரணடைந்தார்.

சரசாலை தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த 18வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு சரணடைந்துள்ளார்.

இவரைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. (அ-50)


## CD கள் மூலம் ஆங்கிலக் கல்வி

★ Spoken English 4 ACD+20VCD
பகுதிபகுதிகளாகவும் CD களைப் பெறமுடியும்.
★ Learning English 4 VCD
4-10 வயதுப் பிள்ளைகளுக்கு உகந்தது.
★ Learn to Speak English
(soft ware) 4CD அனைத்துத் தரப்பினருக்கும் உகந்தது.

கிடைக்கும் இடம்:
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (63819)

**Computer Service & Studies**
(Mobile Service)
- Computer Hardware Repairing
- Net Working & Trouble Shooting
- English Classes (Group & Personal)
- GIT.ICT (Tamil & English Medium)

Spoken With Grammar

Hardware, Software Studies & English Classes for all (Grade 06-A/L & above) Will be carried out
Contact Dal 0776922935
0775386228
(வீடுகளில் குழுவாகவும் தனியாகவும் கற்பித்துக் கொடுக்கப்படும்)


COUNCIL OF NON GOVERNMENTAL ORGANISATIONS,
JAFFNA DISTRICT
No.40, Temple Road, Jaffna

## VACANCY

**PROJECT COORDINATOR**

Applications are invited from suitably qualified candidates for the above post having good knowledge in English and computer skills. Candidates are requested to send the CV and testimonials on or before 25.08.2007. Experience in the related field will be an advantage.

**President**
**Council of NGOs, Jaffna District.** (C/53235)


## M.A., M.Com., M.B.A., M.sc.

**காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)**

- பல்கலைக் கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- பதிவுகள் முடிவு திகதி :- 20-08-2007

குறிப்பு:-
*2007ஆம் ஆண்டு மார்கழி மாதத்திற்கான பரீட்சை விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.*
*பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி 25-08-2007*

யாழ்.இணைப்பாளர்,
காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

**புதிய உயர் கல்லூரி,**
**ஆரியகுளம் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**
(63816)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சரஸ்வதி பொன்னம்பலம்**

மலர்வு
22-05-1939

உதிர்வு
27-07-2006

*அம்மா உன் பிரிவுத் துயரால்*
*ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்...*
*உங்கள் அன்பு முகம் மறந்திடுமா? மறைந்திடுமோ?*
*ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்- உங்கள்*
*நினைவலைகள் நெஞ்சை விட்டு நீங்காதே- அம்மா!*
*அன்பால் எம்மை வளர்த்தெடுத்த அம்மாவே!*
*அன்பு முகம் பார்த்தே படுத்துறங்கிப் பழகிய நாம்*
*இப்போது தூக்கமின்றித் துடியாய்த் துடிக்கின்றோம்*
*எத்தனை யுகங்கள் மலரட்டும்- எம்*
*நெஞ்சமதில் உங்கள் ஞாபகம் நிலைத்திருக்கும்!*
*உங்கள் நினைவுகள் என்றும் சுகமானவையே!*

*உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்:*

*குப்பிளான்,*
*புன்னாலைக்கட்டுவன்*

**பானுமதி** *(மகள்-கனடா),*
**தயாநிதி** *(மகன்).*

(அ/53245)


கலை உலகில் ஒரு சாதனை
கலைத்தூது கலையகம்

**வாழ்த்துகின்றோம்**

**இணைப்புச் செயலகம்,**
**திருமறைக்கலாமன்றம்,**
**கொழும்பு.**

*மலிவான விலையில் புதிய கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள.*

**Sky Computer Systems,**
89A, Kandy Road,
Chundukuli,
Jaffna.
T.P.: 021 222 9109
(C/53247)


## தவறிவிட்டது

மவுன்கார்மேல் றோட், குருநகரைச் சேர்ந்த மூத்ததம்பி யோகநாதன் என்பவருடைய தே.அ.அட்டை (392441409V), வி.அ.அட்டை, மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கொட்டடிக்கும் ஓட்டு மடத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 396, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.No:0777249878. (63815)

## தவறிவிட்டது

90/01, கொட்டடி, சிவன் பண்ணைவீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகராசா (செல்வம்) பிறவுண்சன் என்பவருடைய தே.அ.அட்டை (831472545V) வி.அ.அட்டை (0901007287) யாழ். மையப்பகுதிக்குள் (சந்தைக்குள்) சனிக்கிழமை தவறிவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (63809)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
செ.ஜயபாலலின் அன்புத் தந்தை

**பெ.செல்லையா**
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)



அவர்கள் 13.08.2007 இல் அகாலமரணமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முகாமையாளரும்,**
**சமுர்த்தி அலுவலர்களும்,**
கைதடி வலயம். (63822)

## மரண அறிவித்தல்

***பரராஜசிங்கம் குமாரசிங்கம்***
(இளைப்பாறிய N.S.B. Budget Controller, செயலாளர், கோப்பாய் லயன்ஸ் கழகம்)



கொழும்பைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜ சிங்கம் குமாரசிங்கம் திங்கட்கிழமை 13.08.2007 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் திரு. திருமதி பரராஜசிங்கம் தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினாவள்ளியின் (தேவி - உரும்பிராய் வடக்கு) அன்புக் கணவரும் ஈஸ்வரி (நங்கி), கேதீஸ்வரன்(ஈசன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிதரனின் மாமனும் லக்ஷ்மன், கோபிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2007)புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
*மங்கையர் மகால், கோட்டையடிப்பிரம்,*
*இருபாலை கிழக்கு, இருபாலை.*
(63824)


## சகலவிதமான அச்சக வேலைகளுக்கும்

தமிழ், ஆங்கிலம் ரைப்செற்றிங், ஸ்கானிங், கலர், லேசர் பிறிண்டிங், ரென்சில் கட்டிங், சி.டி.ரைற்றிங், போட்டோக் கொப்பி, *நெற் தொலைபேசி, பக்ஸ்,* Email மற்றும் சகல விதமான அச்சகவேலைகளும் புத்தக பையிண்டிங், கணனி மூலம் சோதிடம் என்பன ஒரே இடத்தில் செய்துகொள்ளலாம். (வெளியூர் தொலைபேசி 10/-, இந்தியா 20/-)

**ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்ரர்**
43, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P. 021 4590015 (63814)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
08 - 07 - 1985



இறப்பு
15 - 08 - 2006

**கிருஸ்ணபிள்ளை பிரதீபன்**

கல்விப் புரட்சியைக் கண்ணெனக் கொண்டாய்...
கயவர்கள் அழிப்பால் காற்றோடு போனாய்...
எல்லை இல்லாத ஈகம் செய்தாய்...
எம்மைத் துயரில் ஏங்கவிட்டாய்!
*உன் நினைவில் என்றும் நாம்....*

*கரவெட்டி.*
**நண்பர்கள்.**
(63808)

## மரண அறிவித்தல்கள்



**சபாபதி பொன்னுச்சாமி**
***(அண்ணாத்துரை)***

'தாய் வீடு', கருணாநிதி சனசமூக நிலையத்தடி, வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிட மாகவும் கொண்ட சபாபதி பொன்னுச்சாமி (அண்ணாத்துரை) 09.08.2007 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி- சின்னக்கிளி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை- இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், கலாவதியின் அன்பு கணவரும், அமுதா, அன்புராஜ் (லண்டன்), அகிலா(லண்டன்), அஜந்தா (ஜேர்மன்), சோ.கோபி ஆகியோரின் அன்பு தந்தையும், சுந்தரலிங்கத்தின் அன்புச் சகோதரனும், இரத்தினவடிவேல், சிவசங்கர்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அஸ்வினி, அனுசன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.08.2007) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'தாய் வீடு'*
*கருணாநிதி சனசமூக நிலையத்தடி,*
*வல்வெட்டி.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**
(63348)



**ஜெயதாஸ் ஜெயதாகஜன்**
***(கஜன்)***

கைதடி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயதாகஜன் (கஜன்) 13.08.2007 திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் ஜெயதாஸ்- சிவசோதி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற அருமைநாதன்- கமலாதேவி தம்பதியரின் மருமகனும் நந்தகுமாரியின் அன்புக் க்ணவரும் பூமிகன், டினோசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயவதனி, ஜெயரமணி, ஜெயரூபன், ஜெயந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் லலிதா, தயாளன், சிவகுமார், குணமலர், சிறிசந்திரா, மோகன் ஆகியயோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.08.2007) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கைதடி மத்தி,*
*கைதடி.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**
(63803)



**சரவணமுத்து சதாசிவம்**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியாலையின் மைந்தன் சாண்டோ மாஸ்ரர் என்று அழைக்கப்படும் முன்னாள் ஓய்வுபெற்ற அதிபர் சரவணமுத்து சதாசிவம் நேற்று (14.08.2007) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரவணமுத்து- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக் கொள்ளவும்.

*305,* A.V. *றோட்,*
*அரியாலை.*

*தகவல்:*
**ரதிதேவி புவனேந்திரராசா.**
(63810)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில் தொலைபேசி இணைப்பு வழங்குவதில் பாரபட்சம்

உடுப்பிட்டி, ஓக.15

வடமராட்சிப் பிரதேசத்தில் புதிய தொலைபேசி இணைப்புகள் வழங்குவதில் பாகுபாடு காட்டப்படுவதாக பாதிக் கப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ரெலிகொம் நிறுவனத்தால் புதிய தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. வடமராட்சியில் புதிய தொலைபேசி இணைப்புகளைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களில் ஆரம்பத்தில் விண்ணப்பித்தவர்களுக்கு இணைப்பு வழங்கப்படாது பாரபட்சம் இடம்பெறுவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. (202-155)

## தென்மராட்சியில் உதவித்திட்டத்திற்கு 250 பேர் தெரிவு

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமூக சேவைகள் அமைச்சின் உதவித் திட்டக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட 250 பேரின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களை தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பார்வையிடலாம் என பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தெரிவித்தார். (202-207)

## சமய சந்நிதிகளில்

நல்லூர் ,ஓக.15

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 29ஆம் திகதி புதன்கிழமை வரை பன்னிரண்டு நாள்கள் நடைபெறும்.

27ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். திருவிழா தினமும் காலை 7மணி முதல் மாலை 5 மணி வரையும் இடம்பெறும். (203-111)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.15

ஆனைக்கோட்டை வரத விக்னவிநாயகர் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

நல்லூர் ,ஓக.15

புங்குடுதீவு கதிர்காமம் ஆலயத்தின் திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.35 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

நீண்ட காலத்தின் பின்னர் இம்முறை மேற் இந்த ஆலயத்தில் திருவிழா நடை பெறுவது குறிப்பிடத்தக்கது. (203-111)

* * *

யாழ்ப்பாணம் ,ஓக.15

சாவகச்சேரி, நுணாவில் மணங்குணாய் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.எதிர்வரும் 27ஆம் திகதி தேர்த்திருவிழா வும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-207)

* * *

யாழ்ப்பாணம் ,ஓக.15

பொன்னாலை வரதராஜாப் பெருமாள் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி மு.ப 11 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 18நாள்கள் நடைபெறும் திருவிழாவில் அடுத்தமாதம் 4ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 24ஆம் திகதி வரலட்சுமி விரத நூல்கட்டுதல் நடைபெறும்.

தீர்த்தத்தன்று மு.ப 11 மணிக்கு சுவாமி ஆலயத்திலிருந்து புறப்பட்டு திருவடி நிலை கடலில் தீர்த்தம் நடைபெறும். (203-15-28)

* * *

யாழ்ப்பாணம் ,ஓக.15

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 27ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (203-207)

# குடாநாட்டில் தெங்கு உற்பத்தியைக் விருத்தி செய்வதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.15

குடாநாட்டில் தெங்கு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு திட் டங்கள் முன்னெடுக்கப்படும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பனை மற்றும் தென்னை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளை சந்தித்து குடாநாட்டின் பனை மற்றும் தென்னை அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடி முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளார்.

யுத்த சூழ்நிலை காரணமாக இலட்சக் கணக்கான பனை, தென்னை மரங்கள் அழிக் கப்பட்டுள்ள இந்நிலையில் பனை அபிவிருத்தியின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுக்க அமைச்சர் திட்டமிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் தெங்கு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் தென்னங் கன்றுகளை நடும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குடாநாட்டிலும் தெங்கு உற்பத்தி அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதும் அதன் மூலம் குடாநாட்டு மக்களின் தெங்கு உற்பத்தி சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அமைச்சரின் எதிர் பார்ப்பாகும் - என்றுள்ளது. (202)

# சந்நிதி ஆலய திருவிழாவை முன்னிட்டு போக்குவரத்துச் சேவை அதிகரிப்பு

உடுப்பிட்டி , ஓக.15

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் நலனைக் கருத்திற்கொண்டு போக்கு வரத்துச் சபையினர் அனைத்துப் பகுதிகளுக்குமான தமது சேவையை அதிகரித்துள்ளனர்.

செல்வச்சந்நிதி ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த ஆலயப் பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பெருமளவான மக்கள் ஆலயத்திற்கு சென்று வருகின்றனர்.

இவர்களது நன்மை கருதி பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினர், போக்குவரத்துப் பிரிவினர், சாரணர்கள், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினர் ஆகியோர் ஆலய நிர்வாகத்தினரின் ஒத்துழைப்புடன் தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடமராட்சி வடக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினர் ஆலயத்தின் வடக்குப் பகுதியில் திருவிழாக்கால அலுவலகம் ஒன்றை அமைத்து பணியாற்றி வருகின்றனர்.

அத்துடன், இரவு நேரங்களில் ஆலயச் சூழலில் தங்கியிருக்கும் பக்தர்களின் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளை ஆலய நிர்வாகத்தினர் எடுத்து வருவதுடன் அவர்களுக்கு வேண்டிய ஆலோசனையும் வழங்கி வருகின்றனர்.

திருவிழாவை முன்னிட்டு போக்குவரத்துச் சபையினர் அனைத்து பகுதிக்குமான போக்குவரத்துச் சேவைகளை அதிகரித்துள்ளனர். (203-155)

## பருத்தித்துறை தபாலகத்திற்கு உதவித் தபாலதிபர் நியமனம்

பருத்தித்துறை பிரதம தபாலகத்திற்கு உதவித் தபாலதிபராக திருமதி சறோஜினிதேவி ஆதிமுத்துலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் உதவித் தபாலதிபராகக் கடமையாற்றிய இவர் தற்போது இடமாற்றம் பெற்றுள்ளார்.

இத் தபாலதக்தில் கடமையாற்றியவர் கரவெட்டி தபாலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (202-78)



*மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் மாணவர்களுக்கான 'சிசு உதான' அலகை ஆரம்பித்து வைத்துள்ளது.*

*இந்த அலகை கல்லூரி அதிபர் கே. தர்மலிங்கம் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் அருகில் மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய உதவி முகாமையாளர் ஏ. குகதாசன், வல்வெட்டித்துறை கிளை முகாமையாளர் பி. கிருஷ்ணானந்தன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.*

*(படம்: சுந்தா)*

## சிவாச்சாரியர் பயிற்சி பெறுவோருக்கு புலமைப் பரிசில் வழங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக.15

இந்தியாவில் சிவாச்சாரியர்கள் பயிற்சி பெறுவதற்கான புலமைப்பரிசில் வழங்குவதற்கு அகில இலங்கை இந்து மாமன்றம் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை இந்து மாமன்ற பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

தமிழக ம் பிள்ளையார் பட்டியில் உள்ள குருகுலப் பாடசாலையில் கலாநிதி பிச்சைக் குருக்களின் வழிகாட்டலில் சிவாச்சாரியர்களுக்கான பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியைப் பெறவிரும்பும் இளம்சிவாச்சாரியர்கள் சுயவிவரங்களுடன் இரு புகைப் படங்கள், அனுபவச்சான்றிதழ், திறமை சார் பானசிபார்சுக் கடிதம் என்பவற்றை இணைத்து பத்து நாள்களுக்குள் '91/5, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு-2' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.15

சாவகச்சேரி மருத்துவமனையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புற்றுநோய் கிளினிக் கட்டடம் இன்று புதன்கிழமை திறந்து வைக் கப்படவுள்ளது.

தற்போது மருத்துவமனை வெளி நோயாளர்கள் பிரிவில் வாரவாரம் கிளினிக் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.(203-207)

* * *

யாழ்ப்பாணம், ஓக.15

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறைக் கலைவட்டம் நடத்திவரும் கருத் தரங்குத் தொடரில் நாளை வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பொருளியல்துறை மண்டபத்தில் 'அரும் பொருளகம்; கற்பிதங்களும், யதார்த்தமும்' என்னும் தலைப்பில் காட்சி உரை இடம்பெறவுள்ளது. இதில் ஜீவரட்ணம் ஜெகதீஸ் உரை நிகழ்த்துவார். (203)

* * *

யாழ்ப்பாணம், ஓக.15

யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறை மண்டபத்தில் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு 'நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியும் உலகளாவிய சவால்களும்' என்னும் தலைப்பில் கருத்துரை இடம்பெற உள்ளது.

பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சி.விஜயகுமார் இதில் கருத்துரை வழங்குவார். (203)

* * *

யாழ்ப்பாணம், ஓக.15

யாழ்.கச்சேரி வீதியில் உள்ள ஸ்ரீகல்கி இல்லம் ஆன்மீக மையத்தில் பகவதி ஸ்ரீ பத்மாவதி அம்மாவின் 53 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை 3 மணிக்கு விசேடபூஜை இடம்பெறவுள்ளது. (203)

# சின்னறோமை எனும் சில்லாலையில் இன்று பொன்விழாக் காணும் கதிரைமாதா ஆலயம்



சரித்திர ஏடுகளில் சின்ன றோமை என குறிப்பிடப்படும் சில்லாலைக் கிராமத்தின் பாதுகாவலியான கதிரைமாதா ஆலயத்தின் பொன்விழா இன்று (15.08.2007) சில்லையூர் மக்களால் சில்லாலையிலும் கொழும்பிலும் இங்கிலாந்திலும் மற்றும் பல இடங்களிலும் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

இலங்கையின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படுபவரும் புனிதராக்கப்பட உள்ளவருமான ஜோசவாஸ் அடிகளாரை வேதத் திற்கெதிரான துன்புறுத்தலில் இருந்து பாதுகாத்து தமது வேத விசுவாசத் தில் உறுதியாக இருந்த சில்லாலை ஊர் சின்னறோமை என அழைக்கப்பட்டதில் வியப்பில்லை.

ஓர் ஆயரையும் 40இற்கு அதிகமான குருக் களையும் 50 இற்கு அதிகமான கன்னியர்களையும் மறையாசிரியர்களையும் யாழ். திருச் சபைக்கு அர்ப்பணம் செய்து விசுவாசத்தில் உறுதியாக நிற்கும் இந்த ஊரின் மைந்தர்கள் இன்று உலகெங்கும் பரவி நல் வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். லூயிஸ் டெய்சி அடி களாரால் 1954ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1957ஆம் கட்டி முடிக்கப்பட்ட சில்லையூர் கதிரை மாதா ஆலயம் இன்றும் அதன அழகிலும் அமைப்பிலும் கட்டடக்கலை நுட்பத்திலும் இன்றைய நவீன ஆலயங்களை மிஞ்சிநிற்கிறது. உலகெங்கும் பரந்து வாழும் இவ்வூரின் மக்கள் தமது சில்லையூர் ஆலயத்தில் நுழைகின்ற போதும் [illegible] ஆனந்தத்தையும் வேறு எந்தவொரு ஆலயத்தினுள் நுழையும்போதும் பெறவில்லை என்றே தெரி விக்கின்றனர். கதிரைச் செல்வி என்றும் கதிரைத் தாய் என்றும் தாம் கொண்டாடும் தமது பாதுகாவலியை இலங்கையில் வேறெங்கிலும் காணமுடியாது என்று பெருமைப்படும் இவ்வூரின் மக்கள் கதிரைத் தாயின் 50 ஆண்டுகால பாதுகாவலில் பெற்றுக்கொண்ட அருளையும் இரக்கத்தையும் இன்றைய தினத்தில் கட்டுரைகள் மூலமும் மலர் வெளியீடுகள் மூலமும் சிறப்புத் திருவிழாத் திருப்பலிகள் மூலமும் கொண்டாடி மகிழ்கின்றனர். கிளிநொச்சியில் மறை ஆசிரியர் எஸ். ஆரோக்கியநாதரின் முயற்சியில் மலர் ஒன்று வெளியிடப்படுகின்றது. சில்லாலையில் குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரின் தலைமையில் பொன் விழாத் திருப்பலி வெகு சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. எமது மண்ணில் கடந்தகால துன்பதுயர அனுபவங்களால் ஊரைவிட்டு இடம்பெயர்ந்து பல துன்பங்களை அனுபவித்தபோதும் கதிரைத்தாய் தம்காவலின் தாயாக எப்போதும் தம் முன்னேயும் பின்னேயும் நின்று பேரழிவுகளில் இருந்து தம்மைப் பாதுகாத்ததாகப் பல அனுபவங்கள் வழி இவ்வூரின் மக்கள் தெரி விக்கின்றார்கள். சில்லையூர் கதிரைத் தாயின் பாதுகாவலில் 50 ஆண்டுகளை நிறைவுசெய்து கொண்டாடும் மக்கள் எமது மண்ணில் நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத் தீர்வும் அமைதியில் வாழக் கூடிய ஒரு பாதுகாப்பான வாழ்வும் தமிழ் மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்றே வேண்டுகின்றார்கள். ''கதிரைச் செல்வியே! எங்கள் ஊர் இன்பத்தாய் நீயே! உம்மையே நம்பி இன்னிலம் வாழும் எம் மக்கள் பாரயோ'' என்று மன மகிழ்வோடும் மன நிறை வோடும் சில்லையூர் அன்னையின் பாதத்தில் பாடிய அந்த பசுமையான நினைவுகளையும் இனிமையான அனுபவங்களையும் தமது மனதுகளில் மௌனமாக அசைபோடும் போது அவர்களின் வேண்டுதல் இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் அனைவருக்கும் சமாதானம் மிக விரைவில் கிடைக்க வேண்டும் என்பதாகவே இருக்கட்டும்.

*- அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**சின்னையா சிவசங்கர்**

மலர்வு
30-12-1982

உதிர்வு
15-08-2006

*சங்கரா!*
*சாதனை படைப்பாயென்று*
*சகாக்கள் நாமிருக்க...*
*உன் வாழ்வில்...*
*விதியது செய்த சதி!!*
*நாள்கள் நகர்ந்து சென்று*
*ஓராண்டாய் ஆனபோதும்...*

*தவிக்கின்றோம் நாமுமிங்கே...*
*உன் ... மாசற்ற வதனம் காண...*
*எம்மை விட்டு நீயும் இன்று*
*எங்கேயடா சென்றுவிட்டாய்?*
*ஒன்றல்ல... இரண்டல்ல...*
*ஓராயிரம் ஆண்டானாலும் ...*
*நீவாழ்வாய் ... எம்நினைவில்...*

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

4ஆம் வருட மாணவர்கள்,
கணித, புள்ளி விபரப் பகுதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

உன் நினைவில்
ஏங்கும் உன் உறவுகள்.

(63336)


### ஆங்கிலம்

*2007 டிசெம்பர் O/L பரீட்சைக்குரிய ஆங்கிலம், ஆங்கில இலக்கியம் உரிய Paper Class வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரினால்.* [63350]
33, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி (நேற்கு), யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது

நாகேஸ்வரன் சுஜிகரன் என்பவருடைய தே.அ.அட்டை இல. 880194488V, வி.அ.இல. 0902042685 என்பன 12.08.2007 அன்று கொடிகாமத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கேணியடி, துர்க்காபுரம், தெல்லிப்பழை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.
T.P.:0276621845, 0779688158 (C/53242)

### பிறிமா சிவப்பு

*விமானம் மூலம் தருவிக்கப்பட்ட பிறிமா சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.*
*குமரன் பாம் விற்பனை நிலையம்,*
*227, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*
V.V.சிவக்குமார், 0776180675 (63349)

### விற்பனைக்கு

சன்டெல் தொலைபேசி இணைப்பு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு :-021 4590360 (63326)


### சாவகச்சேரி லயன்ஸ் மாணவர்களுக்கு இலைக்கஞ்சி

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி சக்தியம்மன் தமிழ் வித்தியாலயத்தில் கற்கும் மாணவர்களுக்கு இலைக்கஞ்சி உணவு வழங்கவுள்ளனர்.

இதேவேளை -இவ் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டதாகவும் கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார். (202-207)

### கலாசார விழா

வடமராட்சி கலாசாரப் பேரவையின் கலை நிகழ்வுப் பெருவிழா நாளை அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய கலாமண்டபத்தில் நடைபெறுகின்றது.

பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும். யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

நிகழ்வில் கிராமிய நடனம், நாட்டுக் கூத்து, கிராமியப் பாடல், இசை நாடகம் போன்ற கலை நிகழ்வுகளுடன் கலைஞர்கள் கௌரவிப்பும் இடம்பெறும்.(1-155)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
29
09
1938



மறைவு
16
07
2007

**அமரர் கந்தையா தர்மலிங்கம்**

*(முன்னாள் முகாமையாளர், நீர்வேலி ப.நோ.கூ.சங்கம்.)*

16.07.2007 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தை கந்தையா தர்மலிங்கம் அவர்களது வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (15.08.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம். எமது தந்தையின் மறைவையொட்டி இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களிற்கும் தொலைபேசி மூலம், பத்திரிகை அஞ்சலி பிரசுரம் ஆகியவை மூலம் துயர்பகிர்ந்தவர்களிற்கும் அத்துடன் அன்னாரது இறுதி நிகழ்வில் சகலவழிகளிலும் உதவியவர்களிற்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*மார்க்கம்பரை,*
*கோப்பாய் வடக்கு.* (சி/53239) **-குடும்பத்தினர்.**

## First Death Anniversary

Born
09
08
1943



Entered Glory
15
08
2006

**S.THANAPALAN**
**Principal Emeritus**
**St.John's College, Jaffna**

**Precious memories linger on**
**Never to be wiped away**
**You are loved and cherished in our hearts**

**Fondly remembered by**
**Your loving wife, children,**
**son-in-law and grand children.**

(63330)


# East West College
## Bangalore

ISO 9001 - 2000 Certified

AFFILIATED TO BANGALORE UNIVERSITY, VTU, RGUHS

- Ultra modern & beautifully land scaped campus in 20 acres land
- Spacious classrooms and fully equipped computer lab with internet facilities.
- Separate hostels for boys and girls with indoor outdoor gams, multi gym, etc..
- More than 75 companies visited last year for campus recruitment.




**East West Admission Center:**

**Colombo Office**
#23, 42nd Lane, Colombo - 06.
Tel: 011-564 0787. 077-379 5707.

**Jaffna Branch Office**
51, Amman Road, Nallur, Jaffna.
021-222 2364 , 077-308 7795

**COURSES OFFERED AT EAST WEST**

*Medical:*
BDS - Dental Science

*Engineering:*
Bachelor of Engineering.
Electronics & Communication,
Mechanical Engineering,
Computer Science, Information Technology.

*Para Medical:*
Bachelor of Pharmacy
B. Sc - Nursing
Diploma in Medical Lab Technician
Diploma in Pharmacy

*Professional Degrees:*
Bachelor of Computer Applications - BCA
Bachelor of Business Management - BBM

*General Degrees:*
Bachelor of Sciences
Microbiology / Genetics / Bio-Chemistry / Bio-Technology


# UNIVERSITY OF JAFFNA
# TENDER NOTICE

The Chairman of the Tender Board, University of Jaffna is inviting sealed bids from qualified Consultants / Consultancy firms for the Consultancy services I & II listed below and from Civil 'works contractors registered with ICTAD in Grade M 8 or above for the work III described below:

| No. | Work Details | Refundable Fee (Rs.) | Non Refundable Fee(Rs.) |
|---|---|---|---|
| I | Consultancy Service for Air Conditioning the Kailasapathi Auditorium of the University of Jaffna. | 5,000.00 | 500.00 |
| II | Consultancy Service for Air Conditioning the Board Room area and adjoining rooms in the I Administration Block of the University of Jaffna. | 5,000.00 | 500.00 |
| III | Repairs/ Improvements to the University of Jaffna Guest House at D7-1/1 Manning Town Flats, Matha Road, Off Base Line Road, Colombo - 08. | 5,000.00 | 500.00 |

Bid documents may be obtained from the Assistant Registrar/ Capital Works & Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna or the Senior Assistant Registrar/ Administration. Vavuniya Campus of the University of Jaffna, Park Road, Vavuniya until 24.08.2007 upon producing a receipt for cash payment of the above refundable and non - refundable deposits at the Shroff's Counter of either the University of Jaffna or the Vavuniya Campus of the University of Jaffna for each bid.

Perfected bid documents for each of the three works should be prepared and sealed separately and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's Office, University of Jaffna or the Rector's office of the Vavuniya Campus. Park Road, Vavuniya.

Bids will be accepted until 2.00 pm on 05.09.2007 and opened immediately thereafter.

Bid documents may be inspected if necessary, by the tenderers free of charge at the Capital Works & Planning Branch of the University Jaffna or the Administration Branch of the Vavuniya Campus during office hours.

University of Jaffna
P.O Box 57,
Thirunelvely,Jaffna,
10.08.2007

Registrar.

(C/53241)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அதிபர்

**பரிமளம் அன்னலிங்கம்**

(B.A.(Cey.), Dip.in ACCt,
Dip.in Edu. Principal, Grade-I)

அதிபர் ஸ்ரீமதி பரிமளம் அன்னலிங்கம் அவர்கள் இப் பூவுலகை விட்டு நீத்து இரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. பாடசாலை அதிபராயிருந்து அளப்பரிய சமய, சமூக, கல்விச் சேவைகளை ஆற்றியுள்ளார். சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் ஆர்வமுள்ளவராய் இருந்துள்ளார். நல்லூர் கந்தசுவாமி கோயில், செல்வச்சந்நிதி முருகன்கோயில், வண்ணை ஸ்ரீ வேங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள்கோயில் பெருந்திருவிழாக் காலங்களில் யாழ்.மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் நடத்தப்படும் தொண்டர் சேவைக்கு வேண்டிய மாணவர் ஆளணியை பெருமனதுடன் வழங்கி உதவி வந்துள்ளார். அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் அயராது உழைத்தவர். இவரின் தளராத உழைப்பால் பாடசாலைகள் வளர்ச்சி கண்டுள்ளன என்பது போற்றுதற்குரியதாகும்.

நேர்மை, அன்பு, பரிவு, அஞ்சாமை, தியாகம், சமதிருஷ்டி, எல்லா உயிர்களிடத்தும் இறைவன் இருக்கிறார் என்னும் உண்மையை உணர்ந்தவர். நாட்டுக்காக, நகரத்துக்காக அயராது உழைத்து, சமுதாயம், சூழல், மரபு, பண்பாடு என்று சொல்லப்படுகின்ற அத்தனையும் ஒரு வீராங்கனைக்குரிய துடிதுடிப்புடன் செயற்பட்டவர்.

உலகில் மிகப்பெரிய உண்மை மரணம்தான். முடியாண்டவரும் முடிவில் ஒரு பிடி சாம்பலாவது இயற்கையின் நியதி.

எமது பெருமதிப்பிற்குரிய ஆளுமையின் இமயமான அதிபர் அம்மா அவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

*அவரின் ஆத்மா சாந்தி பெறட்டும்.*

கொழும்புத்துறையூர் சமூகமணி,
சிவஞானச் செல்வர்,
**சி.சி.வரதராசா** சமாதான நீதிவான்,
முன்னாள் செயலாளர்,
யாழ்.மாவட்ட இந்து சமாதான இளைஞர் பேரவை.

ரொரென்டோ, கனடா.
T.P.: 4167483509.
(63313)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர் 25


## தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை


### வினாத்தாள் I

ஆக்கம்: திரு.வே.அன்பழகன்,
யாழ்ப்பாணம்.

45 நிமிடங்கள்

* கீழே தரப்பட்ட வினாக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. 
a b c d e

02. 
a b c d e

* 03 - 04 வரையுள்ள வினாக்களுக்கான சரியான விடையின் இலக்கத்தைப் [illegible]க்கோட்டில் எழுதுக.

03. வீடு ஒன்றின் உறுப்பினர்களைப் படிமுறையில் காட்டும் சரியான விடை.
1) அப்பா, அக்கா, நான், அம்மா, தம்பி
2) அப்பா, அம்மா, அக்கா, நான், தம்பி
3) நான், அம்மா, அப்பா, தம்பி, அக்கா. (..................)

04. பாடசாலைக் கடமைகளுக்குப் பொறுப்பானவர்களைப் படிமுறையில் காட்டும் சரியான விடை
1) அதிபர், பிரதி அதிபர், பகுதித்தலைவர், வகுப்பாசிரியர், வகுப்புத் தலைவர்.
2) அதிபர், வகுப்பாசிரியர், வகுப்புத் தலைவர், பிரதி அதிபர், பகுதித்தலைவர்.
3) வகுப்பாசிரியர், வகுப்புத் தலைவர், அதிபர், பகுதித்தலைவர், பிரதி அதிபர். (..................)

* பின்வரும் வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

05. வாரம் - நாள் எனின் நிமிடம் - ......................
1) மணித்தியாலம் 2) மாதம் 3) செக்கன்

06. கழுத்து - மாலை எனின் கை - ......................
1) கடிகாரம் 2) காப்பு 3) மோதிரம்

* பின்வரும் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண் கோலத்திற்கு ஏற்ப ? குறி உள்ள அடைப்புக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக

07.
3 → 2 → 5
5 → 4 → 9
8 → 6 → ?

1) 10
2) 13
3) 14

08.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 3 | ? | 27 | 81 |


1) 4 9 3) 15

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சம்பவத்தின் ஐந்து சந்தர்ப்பங்கள் ஒழுங்கு மாறித் தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கைக் காட்டும் விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

09. A - எழும்ப எனக்கு விருப்பமில்லாமல் இருந்தது.
B - என்று அப்பா மிகவும் சத்தமிட்டுக் கூறினார்.
C - ஆயினும் கண்கள் இரண்டையும் கசக்கிக் கொண்டு எழுந்தேன்.
D - "நன்றாக விடிந்து விட்டது எழும்பு"
E - கிணற்றடிக்குச் சென்று கால் முகம் கழுவிக் கொண்டேன்.
1) DBACE 2) ACBDE 3) DABEC

10. A நாங்கள் மரங்களுக்கு ஊடாகப் பார்த்தோம்.
B யாரோ ஒருவர் வரும் சத்தம் கேட்டது.
C உடனே எல்லோரும் அருகில் இருந்த மரத்தில் ஏறினோம்
D கரடி ஒன்று வருவதைக் கண்டோம்
E நாங்கள் காட்டில் சற்றுத் தூரம் சென்றோம்
1) BADCE 2) EBADC 3) ABECD

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே மிக நெருங்கிய தொடர்பை உடைய இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையின் கீழே கோடு இடுக.

11. 
A B C D E F
(1) A உம் F உம் (2) B உம் D உம் (3) E உம் F உம்

12. 
A B C D E F
(1) A உம் C உம் (2) B உம் D உம் (3) E உம் F உம்

* சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

13. சிறு பிள்ளைகள் மூத்தவர்கள் சொற்கேட்க வேண்டும். இதற்குக் காரணம்
i. சிறு பிள்ளைகள் நல்லவை தீயவை யாவை என்று அறிந்திராமை.
ii. மூத்தவர்கள் சிறுபிள்ளைகளிலும் வயது கூடியவராக இருக்கின்றமை.
iii. சிறுபிள்ளைகள் மூத்தவர்களை விட அறிவில் குறைந்தவர்களாக இருப்பது.


14. மழையில் ஒருவன் நடந்து சென்று கொண்டிருக்கின்றான். இதற்குக் காரணம்,
i. கையில் இருந்த குடை பறந்து விட்டது.
ii. மழையில் நனைய வேண்டுமென்று நடந்து கொண்டிருக்கின்றான்.
iii. அவனிடம் குடையில்லாத காரணத்தால் நனைந்து நடந்து கொண்டிருக்கின்றான்.

15. ஒரு நிரையில் ஆண் பிள்ளைகள் வரிசையாக நின்றனர். ஒரு பக்கத்தில் இருந்து கணக்கிடும் போது பாபு 17 ஆவதாக நின்றிருந்தான். மறு பக்கத்திலிருந்து கணக்கெடுக்கும்போது, அவன் 8 ஆவதாக நின்றிருந்தான். எனவே அந்நிரையில் எத்தனை ஆண் பிள்ளைகள் நின்றிருந்தனர்.
1) 24 2) 25 3) 26

16. 24 மீற்றர் கம்பு ஒன்று இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டு, அவற்றுள் ஒரு பகுதி இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டது. அவற்றுள் ஒரு துண்டின் நீளம் எத்தனை மீற்றர்.
1) 3 m 2) 4 m 3) 6 m

* கீழுள்ள வினாக்களில் முதல் இரு படங்களுக்கும் இடையே உள்ள தொடர்பை அவதானித்து அடுத்துவரும் படத்திற்கு உரிய விடையை ABCD ஆகியவற்றில் இருந்துதெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

17. 
A B C D

18. 
A B C D

* பின்வரும் வினாக்களுக்கு கட்டத்துக்குள் உள்ள சொற்களோடு தொடர்புடைய சொல்லைத் தெரிந்து, அதன் கீழ்க் கோடிடுக.

19. [கேட்டல்] [பார்த்தல்] [அறிவுபெறுதல்]
(1) வானொலி (2) தொலைக்காட்சி (3) தொலைபேசி1

20. [மரம்] [பலகை] [பெட்டி]
(1) விவசாயி (2) தச்சன் (3) குயவன்1

* பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

21. சீத்தா வகுப்பறையைக் கூட்டும் போது கமலா வந்தாள். கீதா சீத்தாவுக்கு முன்பே வந்திருந்தாள். பிரியா வந்த நேரத்தில் பாடசாலைக்கு எவரும் வந்திருக்கவில்லை. இதன்படி, பாடசாலைக்கு வந்த ஒழுங்கில் மாணவர்களது பெயர்கள் அமைந்துள்ள சரியான விடை.
1) பிரியா, சீத்தா, கமலா, கீதா
2) பிரியா, கீதா, சீத்தா, கமலா
3) சீத்தா, கீதா, கமலா, பிரியா.

22. ஒரு சிறுமியின் கையில் சில பூக்கள் இருந்தன. அந்தப் பூக்களுடன் ஒரு பூவைச் சேர்த்தால் நால்வருக்குச் சமமாகக் கொடுக்கலாம். ஒரு பூவைக் குறைத்தால் இருவருக்குச் சமமாகக் கொடுக்கலாம். சிறுமியின் கையிலிருந்த பூக்கள் எத்தனை?
1) 12 2) 10 3) 11


* பின்வரும் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்று அடைப்புக்குள் பொருத்தமான விடையை அருகிலுள்ள மூன்று விடைகளிலிருந்து தெரிந்து கீறிடுக

23. 62491 → 1942 → 249 → [ ] 1) 942 2) 49 3) 94
24. 345 → 534 → 453 → [ ] 1) 345 2) 354 3) 435

* ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் இடது பக்கப் பகுதி, வலது பக்கத்தில் உள்ள பகுதிக்குச் சமனாக இருக்குமெனின் (✓) எனவும் இல்லை எனின் (X) எனவும் அடைப்பினுள் அடையாளமிடுக.

25. ASSLPKRTZS - ASSLPRTSS (........)
26. க பKRGPVTJK - க மKRபPVIம த (........)

* பின்வரும் வினாக்களில் முதலில் தரப்பட்ட உருவத்தினை முகம்பார்க்கும் கண்ணாடியூடு எவ்வாறு தெரியும் என்பதனை அறிந்து சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

27. 
a b c d e

28. பின்வரும் நிகழ்வுகள் ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலைக்குச் செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்க வேண்டிய கருமங்கள் பல உள்ளன. அவற்றுள் முதலில் செய்ய வேண்டிய கருமமும் இறுதியில் செய்ய வேண்டிய கருமமும் கீழே தரப்பட்டுள்ளன. விடுபட்ட இடங்களில் வரவேண்டிய சம்பவங்களைக் கொண்ட விடையின் கீழ்க் கீறிடுக.

| | (1) | (2) | (3) |
|---|---|---|---|
| A - நித்திரை விட்டெழுதல் | B - உடை அணிதல் | B - உணவு உண்ணல் | B - முகம் கழுவுதல் |
| B - ............ | C - முகம் கழுவுதல் | C - முகம் கழுவுதல் | C - உடை அணிதல் |
| C - ............ | D - உணவு உண்ணல் | D - உடை அணிதல் | D - உணவு உண்ணல் |
| D - ............ | | | |
| E - வீட்டிலிருந்து புறப்படுதல் | | | |

* பின்வரும் வினாக்களில் A, B எனும் கூண்டுகளுக்குப் பொருத்தமான எண்களை தந்துள்ள விடைகளிலிருந்து தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

29.
```
  5  4  3
  4 [A] 2 +
  9 [B] 5
```
(1) A = 3, B = 17
(2) A = 3, B = 1
(3) A = 2, B = 6


* சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

30. கடந்த 2004ம் ஆண்டில் 27வது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இப்போட்டி நான்கு ஆண்டுகளுக்கொரு தடவை நடைபெறும். எனின் 25வது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி எத்தனையாம் ஆண்டு நடைபெற்றிருக்கச் சாத்தியம்.
1) 1992 2) 1984 3) 1996


* சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

31. 


இங்கு காணப்படும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் படிப்படியாக ஒழுங்கு முறையில் பெரிய பாத்திரங்கள். அவை கொள்ளக் கூடிய லட்டுக்களைப் போட்டு பாத்திரம் நிரப்பப்பட்டுள்ளது. எனவே, நான்காவது பாத்திரத்தில் காணப்படும் லட்டுக்கள் எத்தனை?
(1) 160 லட்டு (2) 115 லட்டு (3) 135 லட்டு (4) 180 லட்டு

32. 



இந்த சதுர எண் கோலத்தில் ஐந்தாவது கோலத்தில் எத்தனை முக்கோணிகள் இருக்கும்?
1) 16 2) 25 3) 20 4) 36

* 
அருகே காணப்படும் ஒரே சமமான 9 கனவுருக்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டப்பட்டதனால் ஆக்கப்பட்டுள்ளது. அதன்படி வினவப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய பொருத்தமான விடையை தந்துள்ள நான்கு விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.
இத்திண்மத்தில்


33. நான்கு முகங்கள் மாத்திரம் வெளியே தெரியும் கனவுருக்கள் எத்தனை உள்ளன?
1) 1 2) 2 3) 3 4) 4

34. இரண்டு முகங்கள் மாத்திரம் வெளியே தெரியும் கனவுருக்கள் எத்தனை உள்ளன?
1) 1 2) 2 3) 3 4) 4

* சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

35. உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒருபிள்ளை சதுர வடிவில் ஒரு பூம்பாத்தியைத் தயார் செய்து அதனைச் சுற்றி ஒரு வேலியை அமைத்தது. அம்புக்குறியினால் காட்டப்பட்டு பாதையினூடு ஒரு திசை வழியே பார்க்கும் போது அப்பக்கத்தில் 10 கம்பங்கள் காணப்படுமெனில் இவ்வேலிக்குப் பயன்படுத்தப்பட்ட கம்பங்களின் எண்ணிக்கை யாது?

1) 36 2) 40 3) 44

36. எனது வயது 8 வருடங்கள். அம்மாவின் வயது எனது வயதின் 5 மடங்கிலும் 4 வருடங்கள் குறைவு. அம்மாவின் வயது என்ன?
1) 40 வருடங்கள் 2) 36 வருடங்கள் 3) 44 வருடங்கள்

37. 
வட்டவடிவக் கடதாசி ஒன்றை நான்காக மடித்து அதன் மூலையில் ஒரு சிறு துளையிடப்பட்டுள்ள விதத்தை உரு காட்டுகிறது. கடதாசி விரிக்கப்படும் போது பெறும் வடிவத்தைக் காட்டும் படம் எது?

(1) (2) (3) (4)

* 38ஆம், 39ஆம் 40ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் வசனங்களில் ஒவ்வொரு குறியீடு தரப்பட்டுள்ளது. எனினும் அவை சரியான வசன ஒழுங்கில் தரப்படவில்லை. சொற்களுக்குப் பொருத்தக்கூடிய குறியீட்டைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

| | | |
|---|---|---|
| நாய் □ | சோறு ○ | சாப்பிடும் △ |
| நாய் ∞ | இறைச்சி □ | சாப்பிடும் △ |
| நாய் ⊟ | மனிதருக்குக் | குரைக்கும் □ |
| மனிதருக்குப் | பசி | |

38. "நாய்" எனும் சொல்லுடன் தொடர்புடைய குறியீடு எது?
1) □ 2) ○ 3) △

39. "சாப்பிடும்" எனும் சொல்லுடன் தொடர்புடைய குறியீடு எது?
1) ⊟ 2) △ 3) □

40. "மனிதருக்கு" எனும் சொல்லுடன் தொடர்புடைய குறியீடு எது?
1) 2) 3) ∞

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குங்கும அர்ச்சனையும், மஞ்சள் ஆடையும் ஆடிப்பூரத்தின் சிறப்பான அம்சங்கள்



சத்துவம், ராஜசம், தாமசம் ஆகிய முக்குணங்களையும் கொண்ட மகாமாயையே முறையே காளி, லஷ்மி, சரஸ்வதியாகவும் இச்சை, கிரியை, ஞானம் ஆகியவற்றின் வடிவமாகவும் ஆனந்தம், சத், சித் வடிவினதாகவும் விளங்குகின்றது.

இத்தகைய சக்தியை புரட்டாதிமாத சாரதா நவராத்திரியிலும் பங்குனி மாத வசந்த நவராத்திரியிலும் சிறப்பாக வழிபடுவார்கள். தை அமாவாசை, மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரைப் பூரணை, வைகாசி விசாகம், ஆடிப்பூரம், கேதாரகௌரி விரதங்கள் போன்ற விஷேட நாள்களும் அம்பிகையினுடைய வழிபாட்டிற்குரிய சிறந்த நாள்களாகும். இவற்றிலே ஆடிப்பூர நன்நாளின் சிறப்புப் பற்றி பூர்வகாரணா கமம் பூர்கர்வ விதிப்படலம் என்னும் தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறப்படுகின்றது.

" ஆசாடேபூரமேலம் ஸ்யாதஸ்வநீபூர மேவா" என ஆடிப்பூர தினத்திலோ அல்லது பூரநட்சத்திரம் முழுமையாக உள்ள நன்நாளிலோ எல்லாவிதமான சித்திகளையும், சாந்திகளையும், மேன்மைகளையும் அடைவதற்கும் கிராமம் முதலான எல்லாவற்றையும் காப்பதற்கும் மங்களம் நிறைந்த புண்ணியகர்மாவான இவ்வைபவத்தை மேற்கொள்ளவேண்டும் என கூறுகின்றது.

மேலும் அம்பிகை திருஅவதாரம் செய்த நன்நாள் பூரநாள் என கொள்ளப்படுகின்றது. திருப்புகழில் அருணகிரிநாதரும் ''திரிபுரத் தப்புப் புவிதரத் தோன்றி'' என பூரநட்சத்திரத்திலே அம்பிகை திரு அவதாரம் செய்தாள் என எடுத்தியம்புகின்றார். ஆதி சக்தியாகிய ஜகன்மாதா அன்னைபராசக்தி மக்களை ஆசீர்வதிக்க வேண்டும் என இவ் உலகில் அவதரித்த தினம் ஆடிப்பூரமாகும். இந் நன்நாளில் தேவிபக்தர்கள் தங்களதும் தங்களைச் சார்ந்தவர்களினதும் நலன்களுக்குமாகத் தேவியைப் பிரார்த்தித்துக் கொள்வார்கள். அணிமாதி அஷ்டசித்திகளையும் அதற்குரிய சக்திகளையும் செய்வதற்குரிய முயற்சிகளை சித்தபுருஷர்களும், யோகிகளும் மேற்கொள்ள ஆரம்பிக்கும் நன்நாளாகவும் ஆடிப்பூரம் கருதப்படுகின்றது.

சிந்தை உருகிச் சிரம்மேற் கரம் வைத்து, அன்னையென்றும் அம்மையென்றும் அவள் திருவடி தொழுவோர்க்குத்தான் தாய் மட்டுமல்ல. பேதையாய், பெதும்பையாய், மங்கையாய் மாறி யவள் என்பதைக் கூறும் அருட் திருநாளே இவ்வாடிப் பூரமாகும். சக்தியின் திருவிளையாடல்கள் பல.

ஆடித்திங்கள் ஆலய உற்சவங்கள் நிறைந்தது. இந்துமத விசேடதினங்கள் மலிந்த காலம் ஆடிமாதமாகும். ஆடிச்செவ்வாய், ஆடிஅமாவாசை, ஆடிக் கார்த்திகை, ஆடிப்பூரம் அவற்றுள் சிறப்பானவை-சமய அடிப்படையில் உயர்ந்தவை.

ஆடிப்பூரத்தை அந்தமாகக் கொண்டு அதன் முன் வரும் நவதினங்களிலும் ஆலயங்களில் பெருந்திருவிழா மங்களப் பொலிவுடன் நடைபெறுவது நாம் அறிந்ததும், தெரிந்ததுமாகும்.

இப்பூரத்திருநாளுக்கு மஞ்சள் ஆடையும் குங்கும அர்ச்சனையும் ஏற்புடையவை.

- பூமகள்


## University of Jaffna, Sri Lanka
## Faculty of Graduate Studies

**Postgraduate Diploma in Public Administration**
**Repeat Examination - 2007**

Applications are invited from candidates who have not been successful at PGD in Public Administration examination in the previous academic years 1999/2000, 2001/2002 and 2004/2005.

Exam entry forms will be entertained up to 2007.08.30 at the Faculty of Graduate Studies.

The above repeat examination will Commence during the Second week of September 2007.

**Registrar**
**University of Jaffna** (C/53235)
10.08.2007


## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 - 04 - 1947



உதிர்வு 27 - 07 - 2006

**அமரர் கந்தையா சித்திரவடிவேல்**
(நடனி)

காலை கதிரவன் விளிக்கு முன்
காதை பிளந்தது உன் மரணச்செய்தி - ஐயா
உறவுகள் ஏதுமின்றி ஆறுதல் கூற யாருமின்றி
விம்மி விம்மி அழுது நிற்க ஓராண்டும் நிறைவேறியது
ஐயா, ஆண்டு ஒன்று சென்றாலும்
காலம் பல கடந்தாலும்
என்றும் உன் நினைவுகளுடன் வாழுகின்றேன்

என்றும் உங்கள் பிரிவால் வாடும்:
சி.அமிர்தலிங்கம் மகன் (செல்வம் - நோர்வே)
குடும்பத்தினர்.

சுப்பர்மடம்,
பருத்தித்துறை. (63319).


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!

PACKED BY:
ROYAL Industries Colombo 12




ஏக விநியோகஸ்தர்கள்:-
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



## கோழிக்குஞ்சு விநியோகம்

Bahiraha புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

★ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★ தாரகை 1ஆம் கட்டை, பருத்தித்துறை
★. மதுரா ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★ திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி,

(63806)



## விற்பனைக்கு

10 அடி டிஸ் அன்ரனா (TOPFIELD) காட் ரிசீவர் உடன் விற்பனைக்கு தொடர்பு:
T.P. 0779599428 (63807)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**இரத்தினம் கிருஷ்ணபிள்ளை**

மலர்வு 04-03-1935 | உதிர்வு 20-07-2004

திதி: திருதியை (15.09.2007)

அம்மா,
அவனியிலே நாமுயர வழிகள் செய்து
அல்லலின்றி நாம் வாழ வளங்கள் சேர்த்து
ஆளாக்கி அரவணைத்த அன்புத் தாயே!
ஆண்டுகள் மூன்றானாலும் அழியாது எம் துயரம்.

'லஷ்மி வாசா' மாரக்காய்,
மில்றோட், புலோலி தெற்கு,
புலோலி. (63344)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## ஒத்திவைப்பு

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை தரம் 4 பரீட்சை ஒத்திவைப்பு

18.08.2007 இல் நடைபெறவிருந்த பரீட்சை திருவிழாவை முன்னிட்டு 20.08.2007 ஆம் திகதி முற்பகல் 8.30 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(63811) - அதிபர்.


# COMPUTER EXPRESS
## INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Brunch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007** 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= | Honours Diploma in Computer Science<br>5 Months<br>~~10,500~~/= 2,100/= | Diploma in Web page Designing<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= |
| Diploma in Graphic Desining<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= | Diploma in Desktop Publishing<br>4 Months<br>~~7,250~~/= 1,450/= | Diploma in Hardware Engineering<br>3 Months<br>~~7,250~~/= 1,450/= |
| Diploma in Auto CAD<br>3 Months<br>~~7,250~~/= 1,450/= | Diploma in Microsoft Office<br>3 Months<br>1,000/= | Accounting Package<br>3 Months<br>~~8,250~~/= 1,650/= |

**50% Off ADVANCE COURSES**

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 17/08/2007 - 9.00AM
Batch II : 18/08/2007 - 11.00AM
Batch III : 19/08/2007 - 11.00AM
Batch IV: 22/08/2007 - 2.00PM

August 15ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.



## கல்வியாண்டு 2007 ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர் கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அநேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான வாய்ப்புக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான ஏனையவற்றையும் உறுதிசெய்கின்றது. அதுமட்டுமல்லாது HND தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள் போட்டி மிகுந்த வேலைவாய்ப்புச் சந்தையில் இலகுவில் தகுதியான வேலைகளைத் தட்டிச் செல்கின்றனர்.

### IIS City Campus இல் கல்விகற்று வெளியேறிய மாணவனின் கருத்து



கே. துவாரகேதன்
மீசாலை

க.பொ.த உயர்தரப் பரீட்சை 2002 எனக்கு ஏமாற்றத்தை அளித்தது. பல்கலைக்கழக அனுமதியை தவறவிட்டேன். எனதுஎதிர்காலம் கேள்விக் குறியாகி என் கண்முன் நின்றது. மனமுடைந்திருந்த இவ்வேளையில் IIS City Campus இன் HND கற்கைநெறி தொடர்பான விளம்பரத்தினைப் பத்திரிகையில் பார்த்து நிறுவனத்துடன் தொடர்ப கொண்டு இக்கற்கைநெறி தொடர்பான பயனுள்ள பல விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. உடனடியாக HND கற்கை நெறியில் இணைந்து கொண்ட நான் சரியாக 1½ வருட காலப்பகுதியில் HND கற்கைநெறியினை சிறப்பான முறையில் பூர்த்தி செய்து கொண்டேன்.

நிறுவனம் எமக்களித்த வாக்குறுதிக் கமைவாக இறுதியாண்டு பட்டக் கல்வியினை இங்கிலாந்து சென்று கற்பதற்காக கிறீன்விச் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்தேன். HND சான்றிதழ் சர்வதேச அங்கீகாரம் பெற்றத என்பதால் எனக்கு உடனடியாக இறுதியாண்டுப் பல்கலைக்கழக அனுமதியும் இங்கிலாந்து செல்வதற்கான ஏனையவும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. எனக்கோர் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கித் தந்த IIS City Campus நிறுவனத்திற்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். குடாநாட்டில் இருக்கும் என் போன்ற மாண்வர்களுக்கு IIS City Campus நிறுவனமும் அதன் HND கற்கைநெறியும் ஒரு மிகச்சிறந்த வரப்பிரசாதம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**BTEC HND**
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

↑

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

↑

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre

# IIS CITY CAMPUS
# 200, Sivan Pannai Road, Jaffna.
TP No. : 021 222 8060 Fax: 021 222 6933 Email: iiscc@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தெற்கில் தோற்றும் மாற்றுத் தரப்பு தமிழர்களுக்கு பயன் ஏதும் தருமா?

தென்னிலங்கையில் மீண்டும் ஒரு தடவை சந்திரிகா புராணம் பாடும் சூழல் எழுந்திருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்து, சுமார் 21 மாதங்களாக அரசியல் அஞ்ஞாதவாசம் சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நாடு திரும்பியிருக்கின்றார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குஎதிராகக் கிளர்ந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டுப் பிரிந்து , ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவை உருவாக்கியிருக்கும் மங்கள சமரவீர - ஸ்ரீபதி சூரியாராய்ச்சி அணிக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆசீர்வாதமும் ஆதரவும் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

மஹிந்த அரசை வீழ்த்துவதற்கு மங்கள - ஸ்ரீபதி அணி, ஐ.தே. கட்சித் தலைவர் ரணிலுடன் சேர்ந்து அமைத்திருக்கும் தேசிய காங்கிரஸுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆதரவும் பின்புல அரவணைப்பும் இருப்பதாகக் கருதும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள், சந்திரிகா - ரணில் - மங்கள என்ற முக்கூட்டு அணி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவுக்கு பெரும் அரசியல் தலையிடியாக அமையும் என்று ஆரூடம் கூறுகின்றன. இதுவே இன்று தென்னிலங்கையில் பரபரப்பாகப் பேசப்படும் அரசியல் விவகாரமாகவும் மாறியிருக்கின்றது.

தமிழர் தாயகத்தின் மீது தீவிரப் போர் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் தற்போதைய அரசுத் தலைமையின் போர் முனைப்புப் போக்கால் தடுமாறிப் போயிருக்கும் தமிழர்களும், தென்னிலங்கையில் இந்த முக்கூட்டு அணியின் திடீர் எழுச்சி, தங்களுக்கு ஏதும் மீட்சியைத் தராதா என்று ஆதங்கத்துடன் நோக்குவதும் புரிகின்றது.

ஒரு தட்டில் ஜனாதிபதி மஹிந்தரையும், மறு தட்டில் ரணில் - சந்திரிகா - மங்கள அணியையும் நிறுத்தி, அரசியல் அளவீடு ஒன்றை நடத்தவேண்டிய தேவை தமிழர்களுக்கு எழுந்துள்ளது.

சரியோ, பிழையோ கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கை தனது நிறைவேற்று அதிகாரத் தலைவராக மஹிந்த ராஜபக்ஷவைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது தமிழர் தாயகம்தான். இந்தப் பின்புலத்திலேயே இந்த அளவீடும் அமைய வேண்டியிருக்கின்றது.

தென்னிலங்கையின் பௌத்த - சிங்கள மேலாண்மைச் சக்திகளை அரவணைத்துக் கொண்டுதான் கடந்த ஜனாதிபதித் தேர்தலை மஹிந்த ராஜபக்ஷ எதிர்கொண்டார். இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில் இந்த பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகள் எழுத்தில் கொடுத்த நிபந்தனைகளை கையெழுத்திட்டு ஏற்று, அந்த உடன்பாட்டுடனேயே அவர் தேர்தல் களத்தில் குதித்தார். அதுபோல, இன்றும் அதே மேலாண்மை சக்திகளோடு கைகோத்து, அரவணைத்து அவற்றின் விருப்புக்கும், எதிர்பார்ப்புக்கும் ஏற்ப தமது அரசை அவர் நடத்திச் செல்கின்றார். பேரினவாத சக்திகளை இணைத்துக் கொண்டுள்ள அவர், அந்த சக்திகளைத் திருப்திப்படுத்தும் வகையில் சிறுபான்மையினரான தமிழர்கள் மீது போர் முனைப்பையும், அரச அடக்கு முறையையும் கட்டவிழ்த்து விடுவதில் வியப்பு ஒன்றுமில்லை. அவர் ஜனாதிபதித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டால் இதைத்தான் செய்வார் என்று தமிழர்கள் எதிர்பார்க்க வேண்டியிருந்தது. இதற்கு மாறாக அவர் நடந்துகொள்வார் என்று கருதுவதற்கு அப்போது ஏதுமிருக்கவில்லை.

ஆக, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தம்மிடம் இருந்து எதிர்பார்க்கப்பட்டதை அட்சரம் பிசகாமல் அவர் இப்போது செயலுருக் கொடுத்து நிறைவேற்றி வருகின்றார். அவ்வளவே.

ஆனால் உத்தேச ரணில் - சந்திரிகா - மங்கள கூட்டு அப்படிப்பட்டதல்ல. அத்தலைவர்களின் கடந்த காலத்தை நோக்குங்கள்.

தமிழர்களோடு பேசி அவர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பேன் என்று கூறி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிப் பீடத்துக்கு ஏறி, பதினொரு ஆண்டுகள் நாட்டைத் தனது இரும்புப் பிடிக்குள் வைத்திருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற பெயரில் விநோதமான கொள்கை ஒன்றை வகுத்து, தமிழர்கள் மீது மிக மோசமான - மிகக் கொடூரமான - மிகப் பெரிய அழிவுகளையும் மனிதாபிமான நெருக்கடிகளையும் ஏற்படுத்திய - குரூரமான யுத்தம் ஒன்றைத் தமிழர் தாயகம் மீது கட்டவிழ்த்து விட்டு, இனப்படுகொலை அழிவுக்கு வழி செய்தார். தேர்தல் சமயத்தில் சமாதானத் தேவதையாகத் தோற்றி பின்னர், ஆட்சிக்காலத்தில் போர் வெறியராகத் தம்மை மாற்றிக் கொண்ட ஜனாதிபதி சந்திரிகாவைத் தமிழர்கள் கண்டார்கள்.

அதேபோலத்தான் ரணில் விக்கிரமசிங்கவும். ஜனாதிபதி சந்திரிகாவின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில், நிதி, சட்டம் - ஒழுங்கு, நில உரிமை, கல்வி போன்ற விடயங்களில் கணிசமான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் பிரதேச சுயாட்சித்திட்டம் முன்வைக்கப்பட்டபோது நாடாளுமன்றுக்குள்ளேயே அதனைக் கிழித்தெறிந்து தீயிட வைத்தவர் ரணில். பின்னர் சமாதானத் தூதன் வேடத்தோடு களமிறங்கி 2001 டிசெம்பரில் பிரதமரான பின்னர், தாம் ஆட்சியிலிருந்த இரண்டு வருடகாலத்தில் அவர் என்ன செய்தார்? ஈழத் தமிழர்களின் அன்றாட மனிதாபிமானப் பிரச்சினைகளையோ, அடிப்படை அரசியல் உரிமை விவகாரங்களையோ, நேர்மையோடும், நியாயம் செய்யும் உறுதியோடும் அவர் அணுகவில்லை. அந்த விவகாரங்களைத் தந்திரோபாயமாகப் பயன்படுத்தி, தமிழரின் போரியல் வலுவைச் சிதைக்க, சர்வதேச வலைப்பின்னல் என்ற சதித் திட்டத்தை அவர் நெறிப்படுத்தினார். உருப்படியான - நீதி, நியாயமான - செயல்முறை சாத்தியமான - தீர்வுத்திட்டம் ஒன்றைத் தமிழர்களுக்கு வழங்குவதை விடுத்து, சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் அவர் விரித்து வைத்த சர்வதேச சதி வலைப்பின்னல் என்ற பொறி குறித்துத் தமிழர்களுக்கு நன்கு தெரியும்.

அதே வகையறாவைச் சேர்ந்தவர்தான் மங்களவும். இன்றைய ஜனாதிபதி ராஜபக்ஷவை பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் கன்[illegible]னயில் அணி சேர்க்க மூல கர்த்தாக்களாக ஒற்றைக்காலில் நின்றவர்களுள் இவரும் ஒருவர். இப்போது வெளியே வந்து நின்றுகொண்டு தான் அமைத்த கூடாரத்தையே வைகிறார் அவர்.

இந்த முக்கூட்டு அணி அதிகாரத்துக்கு வந்தால், இப்போது இருப்பதிலும் விட மேன்மையான நிலைமை தமிழர்களுக்குக் கிட்டும் என்று நம்புவதில் அர்த்தமில்லை. அது அபத்தமான நம்பிக்கையாகவே இருக்கும்.

தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறும் எந்தத் தரப்பும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தாம் என்பதே தமிழர்களின் ஆறு தசாப்தகால அரசியல் பட்டறிவாகும்.

# பதுங்குகுழி அமைக்க நிதி வழங்குவதே மக்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பா?

## புலிகளை விரட்டிய வீறாப்பின் லட்சணம் இதுவா என ஐ.தே.க. எம்.பி. கிண்டல்

கொழும்பு, ஓக். 15

கிழக்கு மாகாணத்தில் இருந்து புலிகளை ஒழித்துக் கட்டிவிட்டோம் என்று அரசு வீறாப்புப் பேசுகின்றது. ஆனால் அநுராதபுரம் எல்லைக் கிராமங்களில் வாழும் சிங்களவர்கள் இன்றும் பதுங்கு குழிகளிலேயே ஒளிந்து வாழ்கின்றனர். இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாத அரசு, பதுங்கு குழிகளை அமைத்துக் கொள்ளப் பணம் கொடுக்கின்றது. - இவ்வாறு குற்றம் சுமத்துகின்றார் அநுராதபுரம் மாவட்ட ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினரான பி. ஹரிஸன்.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அநுராதபுர மாவட்டத்தில் உள்ள எல்லைக் கிராமங்களில் வாழும் சிங்களவர்கள் தொடர்ச்சியாகப் புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகிவருகின்றனர். சில தினங்களுக்கு முன் வெலிஓயாப் பிரதேசத்தில் புலிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதன்போது வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். நால்வர் காயமடைந்துள்ளனர். நான்கு வயதுச் சிறுமி ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளார்.

இந்த எல்லைக் கிராமத்தின் மீது அண்மைக் காலங்களில் 35 தடவைகள் ஆட்டிலறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### தஞ்சம் கோரிய மக்களை அரசு வெளியேற்றுகிறது

ஆனால் அரசு இதனைக் கண்டும் காணாமல் இருக்கின்றது. தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்ட இம்மக்கள் பராக்கிரமபுர வித்தியாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர். இவர்களுக்குப் போதிய பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்காத அரசு இவர்களைப் பலவந்தமாக இப்பாடசாலையிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது. அங்கு பொருத்தப்பட்டிருந்த நீர்த் தாங்கியை பொலிஸார் அகற்றிச் சென்றுள்ளனர். மலசலகூட வசதிகளும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

அங்கு சென்ற மீள்குடியேற்ற, நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பாதிக்கப்படாதவர்களுக்கு காசோலைகளை வழங்கியுள்ளார். ஏனையோர் பாடசாலையை விட்டு வெளியேறினால் மட்டுமே உதவுத் தொகை வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

அதேவேளை அங்கு - தேசத்தைக் கட்டி எழுப்பும் அமைச்சர் - சுசந்த புஞ்சிநிலமே பதுங்கு குழிகளை அமைத்துக் கொள்ளும்படி கூறித் தலா பத்தாயிரம் ரூபா வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றே மாதங்களில் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்று கூறியதாலேயே கிராம மக்கள் அவரை ஜனாதிபதியாக்கினர். ஆனால் ஜனாதிபதியோ, அமைச்சர்களோ இம் மக்களைக் கண்டுகொள்வதே இல்லை.

அரச தொலைக்காட்சியிலும், வானொலியிலும் மட்டுமே புலிகள் விரட்டப்பட்டுள்ளனர், சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் எல்லைப்புற கிராம மக்கள் இன்னும் அச்சத்துடனேயே வாழ்கின்றனர்.

எனவே அரசு இம்மக்களுக்குப் போதிய பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும். - என ஹரிஸன் எம். பி. மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (சி)

## காலம் கடந்த பதிவுகள்; நாளை நல்லூர் பிரதேசத்தில்

நல்லூர் பிரதேச செயலக பிரிவிக்குட்பட்டமக்களின் காலங்கடந்த பிறப்பு, இறப்புப் பதிவுகளை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் பிறபகல் 3 மணிவரை இடம்பெறவுள்ளது.

திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள கலாமன்றக் கட்டடத்தில் இந்தச்சேவை இடம்பெறும்.

அந்தப்பிரதேசத்தில் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்களை சமுகந்தந்து பதிவுகளைச் செய்யுமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (அ-1)

## பரீட்சை எழுதச் சென்ற மாணவி பஸ்ஸிலிருந்து வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம், ஓக.15

பரீட்சை எழுதச் சென்ற மாணவி பஸ்ஸிலிருந்து வீழ்ந்து காயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றது.

பஸ்ஸிலிருந்து மாணவர்கள் இறங்கிக்கொண்டிருந்த வேளையில் அது புறப்பட்டதால் மாணவி தூக்கி வீசப்பட்டு காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த மாணவி சாவகச்சேரி மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றார்.

இதேவேளை, மாணவி பஸ்ஸிலிருந்து வீழ்ந்த போதிலும் பேரூந்தினை நிறுத்தாமல் சென்றதால் அதில் பயணம் செய்த ஏனைய மாணவர்கள் அடுத்த பஸ் தரிப்பிடத்தில் இறங்கி பரீட்சை மண்டபத்திற்கு வந்ததாகவும் அறியவந்தது. (அ-207)

## உணவுப் பொருள்களின் விநியோகம் குறித்து இன்று மாநாடு

யாழ்ப்பாணம், ஓக.15

குடாநாட்டில் அத்தியாவசிய பொருள்களின் சீரான விநியோகம் தொடர்பாக ஆராய்வதற்கான மாநாடு இன்று சமூக சேவைகள் மற்றம் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அமைச்சு அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் தற்போது நிலவிவரும் பொருள்களுக்கான அதிக விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்துதல், குடாநாட்டில் தாராளமாகப் பொருள்களைக் கிடைக்கச் செய்தல் மற்றும் உணவுப் பொருள்களின் விநியோகங்களை சீரமைத்தல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக உயர்மட்ட மாநாடொன்று இன்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் தலைமையில் யாழ்.அமைச்சு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி மாநாட்டில் யாழ்.அரச அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள், கூட்டுறவு உதவி ஆணையாளர், மாவட்டத் திட்டப் பணிப்பாளர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள், நுகர்வோர் பாதுகாப்புக் குழு, சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சு அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் - என்று உள்ளது. (அ-1)

## ஆயுததாரிகள் வீட்டுக்கு தீயிட்டதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக்.15

பகல்நேரம் வீட்டுக்குவந்த ஆயுததாரிகள் தமதுவீட்டை எரித்து விட்டுச் சென்றதாக கோப்பாய் பகுதியைச் சேர்ந்த வயோதிபமாது ஒருவர் யாழ். மாவட்ட மனிதஉரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடுசெய்துள்ளார்.

கோப்பாய்வடக்கு சரவணபவானந்த வித்தியாசாலை வீதியைச் சேர்ந்த 67 வயதான பெண்ணே இம்முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

கடந்த ஏழாந் திகதி இரவுவீட்டிற்கு வந்த ஆயுததாரிகள் வீட்டைச் சோதனையிட்டனர். அப்போது அங்கு இருந்த பொன்னுத்துரை தயாணந்தன் (வயது35) என்ற தனது மகனைக் காணவில்லை எனவும் முறைப்பாட்டில் அப்பெண் மணி தெரிவித்துள்ளார்.

மகன் காணாமற்போனதைத் தொடர்ந்து தாம் வீட்டில் இருப்பதில்லை என்றும் உறவினர் வீட்டில் வசித்து வருவதாகவும், தாம் வீட்டில் இல்லாத நேரம் பகலில் மோட்டார்சைக்கிளில் வந்த ஆயுத தாரிகள் வீட்டைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டுச் சென்றதாகவும் அவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

(அ-1-68)

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 31 | வியாழக்கிழமை 16.08.2007 |
| திதி : திருதியை | காலை 07.20 |
| நட்சத்திரம் : | உத்தரம் மாலை : 06.12 |
| சுபநேரம் | : 07.35 - 09.05 |
| ராகுகாலம் | : 01.35 - 03.05 |

ஆடிப்பூரம்

## சனி மாற்றம் 05.08.2007 முதல் உங்கள் ராசிக்குரிய பலன்

கும்பம்

சங்கானையூர் சண்முகரத்தினம்

**கும்பம்:** (அவிட்டம் 3, 4 ம்கால் சத யம், பூரட்டாதி 1, 2, 3 ம் கால் ஆகிய நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு)

மேற்படி நட்சத்திரத்தில் பிறந்த உங்களுக்கு இதுவரை காலமும் 6 ஆம் வீடான சத்துரு வருத்தம், உபாதைகள் மற்றும் ஆளுமை அகங்காரம் என்னும் 6 ஆம் ராசியில் நின்ற சனிபகவான் (05-08-2007) இல் 7 ஆம் வீடான சிங்கராசியில் வந்து கேதுவுடன் இருக்க, அதனை சந்திரனும், செவ்வாயும் நோக்குவதால் களஸ்திரம் என்று சொல்லும் மனைவி, கணவர், குடும்பம், வெற்றி என்று தரக்கூடிய பலன்தரும் இடத்தில் சனியும் சந்திரனும் ஒன்றையொன்று நோக்கும். அதனால் ஏழரை மாதிரிப்பலனை அடுத்து 2 1/2 வருடங்களுக்கு சனிபகவானுடைய பலன் தர உண்டு.

அதன்படி குடும்பம் என்று சொல்லக் கூடிய நிலைக்குக் குடும்பஸ்தர்களுக்கு துன்பம் தர இடமுண்டு. கும்பம் அல்லது சிங்கராசியில் சனி இருக்கப் பிறந்தவர்களுக்கும் இக்காலப் பகுதி குடும்ப உறவுநிலையில் விரிசல் ஏற்படக்கூடிய பலனைத் தரக்கூடும்.

மேலும் இப்பலன் திருமணம் ஆகாத திருமண வயதுடையவர்களுக்குத் திருமணம் நடக்கவும். அதனால் பிரச்சினைகள் ஏற்படவும் பலன் உண்டு. முக்கியமாக வெளிநாட்டு மாப்பிள்ளையைத் திருமணம் செய்ய நிச்சயம் செய்திருப்பவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் திருமணம் தடைப்படும். மற்றும் திருமணம் நடந்தாலும் குடும்ப ஒற்றுமை அடுத்து 2 1/2 வருடங்களுக்கு கிடைக்காது போகலாம். முக்கியமாகத் திருமண பந்தத்தில் ஈடுபடுபவர்கள் மிக அவதானம் பேணவேண்டும். அதாவது பொ[illegible]த்த நிலையில் முக்கியமாகக் [illegible]மெடுத்தே திருமணம் செய்ய [illegible]ண்டும்.

*மாணவர்க[illegible]க்கு:* பொதுவாக மாணவர்களுக்கு மருத்துவம், கணிதத்துறைக்கு நன்மைதரும் பலன் உண்டு. புதன், வெள்ளி, நற்பலன்தரும் நிலையில் இருப்பது கல்விக்குரியவர்களுக்கு சாதகமானதாகும். ஆனாலும் 16.08.2007 வரை கல்வியை தொடரமுடியாத நிலை சிலருக்கு வரலாம்.

*தொழிலாளர், உத்தியோகத்தர்களுக்கு:* தொழில் கிரகம் வெள்ளியாக இருந்து நன்மைதரக்கூடிய நிலை இருப்பது நற்பலன் தரக்கூடிய பலனைத் தரும். வியாபாரிகள், போத்தலில் அடைத்து இரசாயனப் பொருள்கள் உற்பத்தி செய்வோர் மற்றும் ஆசிரியர் அல்லது அதற்குச் சமமான தொழில் புரிவோர்க்கு ஆண்டு பிற்பகுதியில் நன்மையுண்டு. உத்தியோக உயர்வுகளும் தொழில் வாய்ப்புகளும் வந்து சேரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கொழும்பில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேகத்துக்குரிய முறையில் நடமாடினர் என்ற காரணத்தினால் இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

பிரபு (வயது-27), ரஜனிகாந் (வயது -28), சதீஸ் (வயது-31), ஜோன்ஸன் (வயது - 28), சஜி (வயது- 27) ஆகியோரே கைதானார்கள்.

இவர்கள் கொழும்பைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு ஓட்டோ ஒன்றில் இப் பகுதிக்குச் சென்ற இவர்கள் நேற்றுக்காலை வரை மைதானத்தில் இருப்பதை ஒட்டிய தகவல் ஒன்றை அடுத்தே இவர்கள் கைது செய்யப் பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கில் திரண்டுள்ள இந்த மக்களின் கோரிக்கைக்கு செவி சாய்த்து அரசு விலைவாசி அதிகரிப்பை குறைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (சி)

## கொலையுண்டோரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிக்கப்பட்டிருக்கின்றன.

இதேவேளை, நேற்றுக்காலை சங்கானைப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட தியாகராஜா விமலேந்திரனின் சடலமும் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (சி)




## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றில் ஒன்றுதான் கடந்த வாரம் இலங்கைக்கு வந்த ஐ.நாவின் மனிதாபிமானப் பணிகளுக்கான உதவிச்செயலாளர் ஜோன் ஹோம்ஸ் வெளியிட்ட கருத்து.

மனிதாபிமானப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பற்ற நாடுகளில் ஒன்றாக இலங்கையும் இருப்பதாக அவர் கூறியுள்ளார். இலங்கையில் அவர் சென்று பார்வையிட அனைத்து வசதிகளையும் நாம் அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தோம்.

மூதூர்ப் பணியாளர்களின் கொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகள் தொடர்பாகவும் நாம் அவருக்கு விளக்கிக் கூறியிருந்தோம்.

ஆனால், ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு பேட்டியொன்றை வழங்கிய ஹோம்ஸ், இலங்கை மனிதாபிமாணப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பற்ற நாடாகவுள்ளது என்று கூறினார். மறுநாள் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றுகையில் அதை அவர் கூறவில்லை.

இவர் இடத்திற்கிடம் மாறுபட்ட கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

அது மாத்திரமன்றி இலங்கையில் இதுவரை 34 மனிதாபிமானப் பணியாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் - என்றும் அவர் கூறியுள்ளார்.

உண்மையில் மூதூரில் 17 பணியாளர்களும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த இரு பணியாளர்களும், டெனிஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு பணியாளருமே கொல்லப்பட்டுள்ளனர்.

இவர் சொல்வதுபோல் 34 பணியாளர்கள் கொல்லப்பட்டார்கள் என்று நாம் அறியவில்லை. அவரது கூற்று உண்மையாயின் மீதி 14 பேரையும் புலிகள்தான் கொலை செய்திருப்பர். அந்தப் 14 பேர் பற்றிய விவரங்களை ஹோம்ஸ் எம்மிடம் வழங்கவேண்டும்.

உண்மையில் ஹோம்ஸின் இவ்வாறான கருத்துகள் மூலம் இலங்கைக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இதை நாம் கவனத்தில் எடுத்து அக்கூற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

ஹோம்ஸின் இந்தக் கூற்றைத் திருத்திக்கொள்ளுமாறு நாம் நியூயோர்க்கில் உள்ள எமது நிரந்தரப் பிரதிநிதி மூலம் ஐ.நாவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியினரும் புலிகளும் ஒரே நோக்கைக் கொண்டுள்ளனர். அந்த நோக்கை நிறைவேற்றும் வகையில்தான் ஹோம்ஸ் போன்றவர்கள் செயற்படுகின்றனர்.

### சர்வதேச ஜூரர்கள் சபை

ஹோம்ஸ் மாத்திரமன்றி சர்வதேச ஜூரர்கள் சபையும் இலங்கைக்கு சதி செய்யும் வகையிலேயே செயற்படுகின்றது.

மூதூர் பணியார்களின் கொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சில முக்கிய சாட்சியங்களை இலங்கை அரசு அழித்து விட்டது என அச்சபை குற்றம் சுமத்தியது.

அந்த விசாரணை அறிக்கையைச் சோதித்துப் பார்த்த அவுஸ்திரேலிய உடற்கூற்று நிபுணர் டாக்டர் டொட்டை மேற்கோள் காட்டியே இச்சபை இவ்வாறு அறிக்கை விட்டிருந்தது.

ஆனால், தான் அவ்வாறு இலங்கை அரசால் சாட்சியங்கள் மறைக்கப்பட்டன என்று சொல்லவேயில்லை என்று டாக்டர் டொட் அடித்துக் கூறுகின்றார்.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது சில தீய சர்வதேச சக்திகள் புலிகளின் நோக்கை நிறைவேற்றும் வகையில் செயற்படுகின்றன என்பது மெய்யாகின்றது.

எந்தவிதமான தீய சக்திகளின் சவால்களையும் நாம் எதிர்கொள்ளத்தயார் - என்றார் அவர். (சி)


**ORGANIC CHEMISTRY**
By. E. RANJAN
ஆரம்பம்
16.08.2007 - 6.30 a.m.
ஐடியல் அக்கடமி
67/5, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

**கலை, வர்த்தக பிரிவுகள் 2009/08**
Acc : P.பகீரதன்
Eco : G.பிரதீபன்
Com : K.முரளி
Log : N.உதயன்
Tam : N.சபேசன்
Eng : A.பாலா
Geo : பிரபலஆசிரியர்
IBS சுண்டுக்குளி நல்லூர்

ஆசிரியர் சொன்னதே பரீட்சையில் வந்தது என்று... மாணவர் சொன்னது....
புதிய பிரிவு A/L 2008
கணக்கீடு
பாலகஜன்
பரீட்சையில் வெற்றிக்கு...
உங்களுக்காக கடைசிச் சந்தர்ப்பம்!
(விடுமுறைகால நேர அட்டவணை)
அலுவலகத்தில்
பரீட்சை எழுதிய மாணவர்
தொடர்பு 0777529113
ஆசிரியர் உங்களுக்காக.....
BEACON யாழ்நகர்
BRAINPOWER குருநகர்
வீனஸ் - மானிப்பாய்
புதிய பிரிவு A/L 2009


## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பிப்பவர்களின் சிரமங்கள் நீங்கும் என்றும், ஆனால் விசாவிற்கு விண்ணப்பிப்பவர்கள் தவ்றான வழிமுறையை நாடத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (சி)

## சங்கானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானிப்பாய் பொலிஸார் கொடுத்த தகவலின் பேரில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்புமாறு அவர் பணித்தார்.

சம்பவத்தை அடுத்து அவ்விடத்திலிருந்த வர்த்தக நிலையங்கள் யாவும் உட னடியாக மூடப்பட்டன. (அ-202-68)

## யாழ். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிமுகம் செய்த குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள் மாவட்ட மட்டத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

அந்த வரிசையில் யாழ்.மாவட்டத்துக்கான நீதிமன்றம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களினால் பாரப்படுத்தப்பட்ட சிவில் வழக்குகளை இந்த நீதிமன்றம் விசாரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-202)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு முன்னோடியாக தெரிவுக் குழுக்கூட்டம், பண்டாரநாயக்கா சர்வதேச மண் டபத்தில் இயங்கும் அரச சமாதானச் செயலக அலுவலகத்தில் நேற்றுக் கூடியது.

நேற்றைய கூட்டத்தில் தெரிவுக் குழு உறுப்பினர்களில், ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியைச் சேர்ந்த எஸ்.தவராசா, தேசிய ஐக் கிய முன்னணியைச் (நுஆவை) சேர்ந்த அப்துல் கலாம் ஆகிய இருவரையும் தவிர ஏனையோர் பங்குபற்றினர்.

தலைவர், பேராசிரியர் திஸ்ஸ விதா ரணவின் தலைமையில் கூடிய குழுவின் கூட்டம் பத்தே நிமிடங்களில் முடிவுற்றது. அடுத்த அமர்வுக்கான திகதி எதுவும் குறிப் பிடாமல் கலைந்து போனது.

காரணம் - தெரிவுக் குழு தயாரித்த முன்னோடி யோசனை, கட்சித் தலைவர்களால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அதன் இறுதி வடிவம் முன்மொழியப்பட வேண்டும் என்று -

ஸ்ரீ.ல.சு.கட்சியின் பிரதிநிதி பேராசிரியர் விஸ்வ வர்ணபாலாவும், மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதி பேராசிரியர் நளின் டி சில்வாவும் ஆட்சேபம் தெரிவித்தனர். அத்தோடு தெரிவுக் குழுக் கூட்டத்தைக் காலவரையின்றி ஒத்திவைக்க வேண்டுமென்றும் பிரேரித்தனர். கூட்டம் திகதி குறிப்பிடப்படாமல் கலைந்தது அதன் விளைவேயாகும்.

இதேவேளை -

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு நேற்றுமுன்தினம் கூடி தெரிவுக் குழுவின் யோசனை வடிவத்தை வாதப் பிரதிவாதங்களுடன் மிக நீண்ட நேரம் - இரவிரவாக - ஆராய்ந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசலிங்கம் மனோன்மணி (பூமணி)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரம் ஊரதீவை பிறப்பிடமாகவும் தற்போது ஜம்பட்டா வீதி, செல்லையா தோட்டம், கொழும்பு-13 வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் மனோன்மணி (பூமணி) கொழும்பில் நேற்று (14.08.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராசலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பார்வதி தம்பதியரின் மருமகளும் கிருஷ்ணபாலன் (பிரான்ஸ்), கிருஷ்ணவதனி (சுவிஸ்), கிருஷ்ணபேபி (கனடா), ராதாகிருஷ்ணன் (பிரான்ஸ்), சிறிதரன் (பிரான்ஸ்), கிருஷ்ணமாலா (கொழும்பு), சிவதரன் (கொழும்பு), பகிதரன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*78/9, கஸ்தூரியார் வீதி,*
*(பாரத் ஸ்ரூடியோ அருகில்)*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.:222 7479* (63825)

தகவல்:
நடராசா மகேஸ்வரி (சகோதரி),
ந.கோணேஸ்வரன்
(சிவா - பெறாமகன்)

### திருமதி செந்தூரன் தாரணி

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செந்தூரன் தாரணி நேற்று (14.08.2007) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கோணேசபிள்ளை - விமலாதேவி தம்பதியரின் மகளும் செந்தூரனின் பாசமிகு மனைவியும் அமலன், நிருந்தன், தர்சிகா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புளியங்கூடல் தெற்கு,*
*ஊர்காவற்றுறை.*
*தொ.பே: 0777252136, 0777337522* (63821)

தகவல்:
தந்தை.

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் கயிலைநாதன்



காங்கேசன்துறை, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கயிலைநாதன் நேற்று (14.08.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - சிவக்கொழுந்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற கார்த்திகேசு - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பார்த்தீபனின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் சிதம்பரேஸ்வரி, காலஞ்சென்ற சிவயோகன் ஆகியோரின் சகோதரனும் சிவஞானசுந்தரம் (சுவிஸ்), மகேஸ்வரி (கொலண்ட்), லோகேஸ்வரன், ரதிதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2007) புதன்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரின்இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நெல்லியடிஇந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மில்லேன், காளிகோயிலடி,*
*நெல்லியடி, கரவெட்டி.* (63826)

தகவல்:
குடும்பத்தினர்.

### தியாகராஜா விமலேந்திரன்



காரைநகரைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா விமலேந்திரன் நேற்று (14.08.2007) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா - தங்கரத்தினம் தம்பதியரின் மகனும் மயில்வாகனம் - கமலாதேவி தம்பதியரின் மருமகனும் குமுதினியின் அன்புக் கணவரும் கபில்ராஜ் (யா/தமிழ் கந்தையா வித்தியாசாலை), விமல்ராஜ்(உடுவில் மகளிர்கல்லூரி), சங்கவி (கலைமதி முன்பள்ளி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராணி, தேவா, சோதி, சாந்தா, மலர் (மதி) ஆகியோரின் சகோதரனும் மதிவண்ணன், மணிவண்ணன் (வசந்தன் - கிருஷ்ணா கிறீம் ஹவுஸ்)ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (15.08.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கபுலவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*கந்தரோடை மேற்கு,*
*சுன்னாகம்.* (63827)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.08.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org